செ.வெ.எண்:27 நாள்:15.09.2019

# அரியலூர் மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு மிதி வண்டிப்போட்டியினை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், விளையாட்டுத்துறையின் சார்பில், விளையாட்டு அரங்கத்திலிருந்து முன்னாள் காலஞ்சென்ற தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு அதனை சிறப்பிக்கும் வகையில் அண்ணா சைக்கிள் போட்டியினை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் இன்று (15.09.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இப்போட்டியில், பல்வேறு பள்ளிகளிலிருந்து கலந்து கொண்ட மாணவர்களுக்கு 3 பிரிவுகளாக நடைபெற்றது. 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விளையாட்டு அரங்கினை 3 சுற்றுகளும், 9ஆம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விளையாட்டு அரங்கினை 5 சுற்றுகளும், 11ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விளையாட்டு அரங்கினை 10 சுற்றுகளும் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் வீரர் வீராங்கனைகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும், முதல் பத்து இடங்களைப்பெறும் வீரர் வீராங்கணைகளுக்கு தரவரிசை சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயகுமார் ராஜா, உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**